**கவனிக்க .**- *26.04.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* II *பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1809 - 2013 මැයි මස 03 වැනි වැනි සිකුරාදා - 2013.05.03

*1809 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1132 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1141 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) நிதி சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) பிறப்புகள் இறப்புகள் பதிவு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2013, மே மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மே மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## கங்க இஹல கோறளே பிரதேச சபை

*மத்திய மாகாண அரச சேவையின் பதவி வெற்றிடங்கள்*

*மத்திய மாகாண அரச சேவையின் கங்க இஹல கோறளே பிரதேச சபையில் வெற்றிடங்களாகவுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கென ஆட்சேர்ப்பு செய்வதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள கங்க இஹல கோறளே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1.*

| *தொடர் இல.* | *பதவிப் பெயர்* | *வெற்றிடங்கள் எண்ணிக்கை* | *சம்பள அளவுத்திட்டம்* | *கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்* |
|---|---|---|---|---|
| 1 | வீதித் தொழிலாளர் தரம் III | 03 | 2006 A (IV) PL 1 12 ஆவது படி ரூபா 11,730-10×120-10×130-12×145-ரூபா 17,600. | க. பொ. த.(சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழியுடன் குறைந்தது ஆறு பாடங்களில் இருதடவைகளுக்கு மேற்படாது சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 2 | சுகாதாரத் தொழிலாளர் தரம் III | 01 | PL 1 A 2006 12 ஆவது படி ரூபா 12,470-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600. | தரம் 08 (ஆண்டு 9) இற்குரிய பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |
| 3 | வாகன ஓட்டுநர் தரம் II B | 01 | PL 3 2006A ரூபா 12,470-10×120-10×130-10×145-12×160-12×170-ரூபா 18,860. | (அ) தரம் 08 (ஆண்டு 9) இற்குரிய பாடத் திட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>(ஆ) மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட 24 அந்தருக்குக் குறைந்த தனியார்/வாடகை வாகனங்களை ஓட்டுவதற்கான தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>(இ) வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் பெற்றபின் ஓட்டுநராக 3 வருட அனுபவம் பெற்றிருத்தல். இதனை சான்றிதழ் மூலம் நிரூபித்தல் வேண்டும்.<br>(ஈ) ஆகக் குறைந்தது 05 அடியாக உயரம் இருத்தல் வேண்டும்.<br>(உ) பகல் இரவு காலங்களில் சேவையில் ஈடுபடுவதற்குரிய உடற்தகுதியுடன் சிறந்த கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.<br>(ஊ) வீதிப் போக்குவரத்து பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். |
| 4 | மின்சாரத் தொழிலாளர் | 01 | PL 2 2006 ரூபா 12,210-10×120-10×130-10×145-12×160-12×170-ரூபா 18,600. | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் மொழியுடன் குறைந்தது ஆறு |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>**தொழிற் திறமையும் தேர்ச்சியும்**<br><br>* தொழிலுக்குரிய தேசிய தொழிற் தகைமையின் (NVQ - 2) 2 அல்லது (NVQ-3) 3 ஆம் மட்டச் சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br>* தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் (DTET) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br>* தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் (NYSC) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br>* இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை (VTA) யில் வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br>* தேசிய தொழில் பயிலுநர் மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் (NAITA) ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br>* மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுபெற்ற தொழிற் பயிற்சி நிறுவனமொன்றில் வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல். |

*2.* **ஆட்சேர்ப்புக்கான பொதுவான நிபந்தனைகள்:**

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியிலிருந்து தொடரான 3 வருட காலம் கங்க இஹல கோறளே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(iii) விண்ணபங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ளோருக்கு இந்த வயதெல்லை பொருந்தாது.);

(iv) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராகவும் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்;

(v) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் கருதப்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அரச அல்லது மாகாண அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது;

(vi) கங்க இஹல கோறளே பிரதேச சபையில் தற்போது தற்காலிக, சமயோசித, பதிலீட்டு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

*3.* **ஆட்சேர்ப்பு முறை:**

(1) விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றில் ஈடுபடுத்தப்பட்டுத் தகுதியானோர் தெரிவு செய்யப்படுவர்;

(2) வாகன ஓட்டுநர் பதவிக்காக தெரிவுசெய்யப்பட முன்னர் விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சையொன்றுக்கு தோற்றுதல் வேண்டும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் நியமனத்துக்கு முன்னர் மோட்டார் வாகனப் பிரிவு அலுவலர் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் அலுவலர் ஆகியோரால் நடத்தப்படும் வாகன ஓட்டுதல் பற்றிய தேர்ச்சியை அளவிடும் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

4. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்**:

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை;

(ii) விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்பு உரித்துண்டு;

(iii) நியமனங்கள் 03 வருடகாலம் தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படும்;

(iv) போதியளவு பிணை வைப்புத்தொகையைப் பணமாகவோ அல்லது வேறு வகையிலோ செலுத்த வேண்டுமென விதிக்கும் பட்சத்தில் பிரதேச சபையில் அதனைச் செலுத்துதல் வேண்டும்;

(v) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக தாபனக்கோவை நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமானங்களுக்கும், கௌரவ ஆளுநர் அவர்களது கட்டளைகளுக்கும், மத்திய மாகாண அரசசேவை ஆணைக்குழு காலத்துக்குக் காலம் விதிக்கும் பிரமாணங்களுக்கும் கட்டளைகளுக்கும், உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத் தலைவர் அவர்களது கட்டளைகளுக்கும் அமையச் செயற்படுதல் வேண்டும்;

(vi) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதப்படுத்தும், மாற்றியமைக்கும், அல்லது திருத்தியமைக்கும் அறிவிப்பை இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரங்களும் கங்க இஹல கோறளே பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

5. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.-இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிட்டு, "செயலாளர், கங்க இஹல கோறளே பிரதேச சபை, குருந்துவத்த பஸார்" என்ற முகவரிக்கு 2013.05.17 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். (தற்போது மாகாண அரச சேவையில் பணியாற்றுவோர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்). விண்ணப்பங்கள் A 4 அளவு தாளில் தயாரிக்கப்படுதல் வேண்டும். பூரணமற்ற விண்ணப்பங்களும் உரிய திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

6. **விண்ணப்பத்துடன் முன்வைக்கப்படவேண்டிய ஆவணங்கள்**.- விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்களது பிரதிகளை இணைத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது முதற் பிரதிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்:-

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) கல்வித் தகைமைச் சான்றிதழ் ;

(3) தமது வதிவிடத்தை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளர் வழங்கிய சான்றிதழ் ;

(4) அண்மையில் பெறப்பட்ட 02 நற்குணச் சான்றிதழ்கள் (அவற்றில் ஒன்று வதிவிடக் கிராம அலுவலரால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்) ;

(5) சேவைச் சான்றிதழ் (தற்போது அரச சேவையில் இருப்போருக்கு மட்டும்).

தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களில் கருத்து முரண்பாடுகள் ஏற்படுமெனின் சிங்கள கருத்துக்களே முன்னிலை வகிக்கும்.

டி. ஏ. ரஞ்சனி பிரேமலதா,
செயலாளர்,
கங்க இஹல கோறளே பிரதேச சபை,

கங்க இஹல கோறளே பிரதேச சபை,
குருந்துவத்த பஸார்.

2013.04.11.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**கங்கஇஹல கோறளே பிரதேச சபை**

................................ பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆ) முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. பிறந்த திகதி :-
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
2013.05.17 ஆந் திகதியன்று வயது:
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
4. ஆண்/பெண் :----.

5. விவாகமானவரா? தனித்தவரா? :----.
6. தேசிய இனம் :----.
7. வம்சாவளியினாலா அல்லது பதிவினாலா இலங்கைப் பிரசை ? :----.
8. கல்வித் தகைமைகள் :----.
9. தொழிற் தகைமைகளும் சேவை அனுபவமும் :----.
10. ஏற்கனவே இந்தப் பிரதேச சபையில் பணியாற்றுபவராயின், வகிக்கும் பதவியும் சேவைக்காலமும் :----.
நியமனத்தின் தன்மை (நிரந்தர/சமயோசித/தற்காலிக/ஒப்பந்த/பதிலீட்டு அடிப்படை)

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிமொழிகின்றேன். மேற்குறித்த தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னரெனின், தகுதியற்றவராக ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின், நட்டஈடின்றிச் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

5-41

---

**மெததும்பர பிரதேச சபை**

*மத்திய மாகாண அரச சேவையின் பதவி வெற்றிடங்கள்*

மெததும்பர பிரதேச சபையில் வெற்றிடங்களாகவுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கென ஆட்சேர்ப்பு செய்வதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள மெததும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | வேலை வெளிக்களத் தொழிலாளர் | 03 | 2006 A (IV) PL 1 ரூபா 11,730-10×120-10×130-12×145-12×160-ரூபா 17,600. | தரம் 08 (ஆண்டு 9) இற்குரிய பாடத் திட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |
| 2 | சுகாதாரத் தொழிலாளர் தரம் III | 01 | PL 1 A 2006 ரூபா 12,470-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600. | தரம் 08 (ஆண்டு 9) இற்குரிய பாடத் திட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |
| 3 | நூலக உதவியாளர் | 02 | PL 1 A 2006 ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600. | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் மொழியுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 4 | மின்சாரத் தொழிலாளர் | 01 | PL 2 A 2006 ரூபா 12,210-10×120 10×130-10×145-12×160-12×170 ரூபா 18,600 | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் மொழியுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனமொன்றில் உரிய துறையில் ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழைப் பெற்றிருத்தல். உரிய துறையில் 2 வருடத்துக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல். |

2. **ஆட்சேர்ப்புக்கான நிபந்தனைகள்:**

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியிலிருந்து தொடரான 3 வருட மெததும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ளோருக்கு இந்த வயதெல்லை பொருந்தாது.);

(iv) விண்ணப்பதாரி சிறந்த தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்;

(v) முறையான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தகுதியானோர் தெரிவுசெய்யப்படுவர்;

(vi) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் கருதப்படாதவராக இருத்தல் வேண்டும்;

(vii) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதப்படுத்தும், மாற்றியமைக்கும், அல்லது திருத்தியமைக்கும் அனைத்து அதிகாரங்களும் மெததும்பர பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு;

(viii) மெததும்பர பிரதேச சபையில் தற்போது தற்காலிக, சமயோசித, பதிலீட்டு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:**

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை;

(ii) நியமனங்கள் 03 வருடகாலம் தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படும்;

(iii) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமானங்களுக்கும், திணைக்கள கட்டளைகள் மற்றும் மத்திய மாகாண சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் பிரமாணங்களுக்கும் கட்டளைகளுக்கும் அமையச் செயற்படுதல் வேண்டும்.

4. **விண்ணப்பிக்க வேண்டிய முறை.**- (1) இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமையத் A 4 அளவு தாளில் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிட்டு, "செயலாளர், மெததும்பர பிரதேச சபை, தெல்தெனிய" என்ற முகவரிக்கு 2013.05.23 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்களது உறிப்படுத்தப்பட்ட பிரதிகளை அனுப்பி வைத்தல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) கல்வித் தகைமைச் சான்றிதழ் ;

(3) தொழில் பற்றிய தகைமைச் சான்றிதழ் ;

(4) பிரதேச செயலாளரது இணைக் கையொப்பத்துடன் கிராம அலுவலர் வழங்கிய சான்றிதழ் ;

(5) அண்மையில் பெறப்பட்ட 02 குணச் சான்றிதழ்கள் (அவற்றில் ஒன்று வதிவிடக் கிராம அலுவலரால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

எம். ஆர். பி. ஹேரத் பண்டா,
செயலாளர்,
மெததும்பர பிரதேச சபை,

மெததும்பர பிரதேச சபை,
தெல்தெனிய.
2013.04.17.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மத்திய மாகாண சபையின் அரச சேவையின் மெததும்பற பிரதேச சபை**

................................ பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

(ஆ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :----.

2. நிரந்தர முகவரி :----.

3. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

5. (அ) பிறந்த திகதி :- ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியிலுள்ளவாறான வயது :-

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள்:----.

6. ஆண்/பெண் :----.

7. விவாகமானவர்/தனித்தவர் :----.

8. நீர் இலங்கைப் பிரசையா? பதிவினாலா அல்லது வம்சாவளியினாலா :----.

9. கல்வித் தகைமைகள் :----.

10. ஏனைய தகைமைகள் :----.

11. நீங்கள் தற்போது இந்தச் சபையில் சேவையாற்றுவதாயின் தற்போது வகிக்கும் :-

(1) பதவி ;.

(2) நிரந்தரம்/சமயோசிதம்/தற்காலிகம்/ஒப்பந்தம்/பதிலீடு ;

(3) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி.

12. நீங்கள் எப்போதாவது குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் கருதப்பட்டவரா?:----.

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விடயங்களுள் ஏதேனும் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னரெனின், நான் தகுதியற்றவனாக ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின், நட்டஈடு எதுவுமின்றி பதவிநீக்கம் செய்யப்படுவதற்கு உடன்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச சேவையில் உள்ளோரது விண்ணப்பங்கள் தொடர்பில் நிறுவனத் தலைவரது சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி ---------------- என்பவர் இந்த நிறுவனத்தில் ---------------- ஆக பதவி வகிக்கிறார். இந்தப் பதவிக்காகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்வகையிலேனும் குற்றமொன்றுக்கு உட்படுத்தப்படவில்லை என உறுதிப்படுத்தி அவரது விண்ணப்பத்தை பரிந்துரை செய்கின்றேன்.

-----,
நிறுவனத் தலைவரது கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.
5-43

**கலேவெல பிரதேச சபை**

*மத்திய மாகாணம அரச சேவையில் கலேவெல பிரதேச சபையில் வெற்றிடங்களாகவுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கென ஆட்சேர்ப்பு செய்வதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள கலேவெல பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

| தொடர் எண் | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளஅளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | வாகன ஓட்டுனர் தரம் III | 02 | PL-3-2006A ரூ. 12470- 10x130- 10x145-12x160- 12x170-ரூ. 18860. | (அ) க.பொ.த (சா.த.) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>(ஆ) மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட 24 அந்தருக்கு குறைந்த ஸ்டேஷன் வெகன் தனியார்/ வாடகை வாகனங்களை ஓட்டுவதற்கான தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>(இ) வாகன ஓட்டுனர் அனுமதிப்பத்திரம் பெற்ற பின் ஓட்டுனராக 3 வருட அனுபவம் பெற்றிருத்தல். (இதனை சான்றிதழ் மூலம் நிரூபிக்க வேண்டும்.)<br>(ஈ) பகல் இரவு காலங்களில் சேவையில் ஈடுபடுவ தற்குரிய உடற் தகுதியுடன் சிறந்த கண் பார்வையும் இருத்தல் வேண்டும்.<br>(உ) வீதிப் போக்குவரத்து பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும்.<br>(ஊ) ஆகக் குறைந்தது 05 அடியாக உயரம் இருத்தல் வேண்டும். |
| 02 | மின்சாரத் தொழிலாளர் தரம் III | 01 | PL2 2006 ரூ.12210- 10x120 10x130 10x145 12x160 12x170-18600 | (அ) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>(ஆ) தொழிலுக்கான தொழிற் தகைமை பற்றிய சான்றிதழ்களை முன் வைத்தல் வேண்டும். |
| 03 | அலுவலகக் கரும உதவியாளார் தரம் III | 01 | 06/2006 (iv)PL1 ரூ. 11,730-10x120 10x130-10x145 12x160 -ரூ. 17600 | (அ) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 04 | நூலக உதவியாளர் (அ.ஊ.சே. தரம் III) | 01 | 06/2006 (IV) PL1 ரூ. 11730-10x120 10x130 -10x145 12x160- 17600 (ஆரம்ப ரூ. 13,060 12 படி) | (அ) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 05 | வேலை வெளிக்களத் தொழிலாளர் தரம் III | 01 | 06/2006(IV)PL1 ரூ. 11,730-10x120 10x130- 10x145 12x160 -ரூ. 17,600 | தரம் 08 (ஆண்டு 9) இற்குரிய பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |

| தொடர் எண் | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளஅளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 6 | சுகாதாரத் தொழிலாளர் (அ.ஊ.சே. தரம் III | 03 | 06/2006(IV) PLI ரூ. 11,730- 10×120 - 10X130 - 10X145 - 12X160- ரூ. 17,600 | தரம் 08 (ஆண்டு 9) இற்குரிய பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |

2. **பொதுவான தகைமைகள்**:

(I) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(II) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராகவும் நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

(III) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ளோருக்கு இந்த வயதெல்லை பொருந்தாது.)

(IV) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியிலிருந்து தொடரான 3 வருட காலம் கங்க இஹல கோரளே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.(வாக்காளர் பதிவு இடாப்பில் அல்லது பிரதேச செயலாளர் உறுதிப்படுத்திய சான்றிதழை முன் வைத்தல் வேண்டும்.)

(V) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் கருதப்படாதவராக இருத்தல் வேண்டும்.

(VI) கலேவெல பிரதேச சபையில் தற்போது தற்காலிக, சமயோசித, பதிலீட்டு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

(VII) விண்ணப்பதாரிகள் பதிவினாலோ அல்லது வம்சாவளியினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

3. **ஆட்சேர்ப்பு முறை**.- கட்டமைப்புடனான நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம் தகுதியானோர் தெரிவு செய்யப்படுவர்.

4. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்**:

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை. உரிய வகையில் விதவைகள்/தபுதாரிகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்பு செய்தல் வேண்டும்;

(ii) நியமனங்கள் 03 வருட காலம் தகுதிகாண் சேவைக் காலத்திற்கு உட்படும்;

(iii) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக தாபனக்கோவை நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், மத்திய மாகாண அரசசேவை ஆணைக்குழு காலத்துக்குக்காலம் விதிக்கும் பிரமாணங்களுக்கும் கட்டளைகளுக்கும், மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் விதிக்கும் கட்டளைகளுக்கும் சட்டங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் மற்றும் கலேவெல பிரதேச சபை விதிக்கும் கட்டளைகளுக்கும் அமையச் செய்யப்படுதல் வேண்டும்.

5. **விண்ணப்பிக்க வேண்டிய முறை** .- தற்போது மாகாண அரச சேவையில் பணியாற்றுவோர் தமது விண்ணப்பங்களைத் திணைக் களத் தலைவரூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

உரிய திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதப்படுத்தும், மாற்றியமைக்கும், அனைத்து அதிகாரங்களும் கலேவெல பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிட்டு "செயலாளர், பிரதேச சபை, கலேவெல" என்ற முகவரிக்கு, 2013, மே மாதம் 15 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இட்டனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பபடிவத்துடன் பின்வரும் ஆவணங்களது பிரதிகளை இணைத்தல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) கல்வித்தகைமைச் சான்றதழ் ;

(iii) ஆளடையாள அட்டையின் பிரதி ;

(iv) அண்மையில் பெறப்பட்ட 02 குணச் சான்றிதழ்கள் (அவற்றில் ஒன்று வதிவிடக் கிராம அலுவலரால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.);

(v) தற்போது இந்த நிறுவனத்தில் பணியாற்றுவதாயின் சேவைச் சான்றிதழ்.

எச். நிமல் குணவர்தன,
செயலாளர்,
கலேவெல பிரதேச சபை.

பிரதேச அலுவலகம்,
கலேவெல,
2013, ஏப்பிறல் 03.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**கலேவெல பிரதேச சபை**

*மத்திய மாகாண சபையின் அரச சேவையில் நிலவும் .......................... பதவி*

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர்:----.
(ஆ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள்:----.
02. நிரந்தர முகவரி:----.
03. கிராம சேவையாளர் பிரிவு, இலக்கம் :----.
04 பிறந்த திகதி:- ஆண்டு :-----, மாதம் :----, நாட்கள்:----.
05. விண்ணப்ப முடிவு திகதியன்று வயது:
வருடங்கள்:----, மாதங்கள்:----, நாட்கள்:----.
06. ஆண்/பெண்:----.
07. தேசிய அடையாள அட்டை இலக்கம்:----.
08. கலேவெல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தர வதிவு காலம் :----.
09. நீர் இலங்கைப் பிரசையா? பதிவினாலா? அல்லது வம்சாவளியினாலா?:----.
10. கல்வத் தகைமைகள்:----.
11. ஏனைய தகைமைகள்:----.
12. தொழிற்தகைமை:----.
13. சேவை அனுபவம்:----.
(i) தற்போதைய சேவை நிறுவனம்:----.
(ii) தற்போதைய பதவி:----.
(iii) அப் பதவிக்குரிய நியமனத் திகதி:----.
(iv) இதற்கு முன் சேவை செய்த இடங்கள்:----.

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் நான் அறிந்தவரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். இங்கு தரப்பட்டுள்ள விடயங்களுள் ஏதேனும் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்திற்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் நட்ட ஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு உடன் படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:----.

**தற்போது அரச சேவையில் உள்ளோரது விண்ணப்பங்கள் தொடர்பில் நிறுவனத் தலைவரது சான்றிதழ்**

திரு. /திருமதி /செல்வி................................................ என்பவர் இந்த நிறுவனத்தில் ................................... ஆக பதவி வகிக்கின்றார். இந்தப் பதவிக்காகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்வகையிலேனும் குற்றமொன்றுக்கு உட்படுத்தப்படவில்லை என உறுதிப்படுத்தி அவரது விண்ணப்பத்தை சான்றுபடுத்துகிறேன்.

-------,
நிறுவனத் தலைவரது கையொப்பம்:

பெயர் :-----.
பதவி :-----.
பதவிமுத்திரை :-----.
திகதி :----.

5-84

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ருவன்வெல்ல பிரதேச சபை

### நிறைவேற்றப்பட்ட துணைச்சட்டம்

*261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (நிறைவேற்றப்பட்ட துணைச்சட்ட) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் முதலாம் உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப ருவன்வெல்ல பிரதேச சபையினால் 2012.10.30 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 05-5 ஆம் இலக்க பிரேரணை நிறைவேற்றப் பட்டதாக இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.*

தவிசாளர்,
ருவன்வெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வெல்ல.

#### அட்டவணை

*"1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந்தன்மை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) பந்தியுடன் வாசிக்கவேண்டிய 261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமைப்புக்கள் (நிறைவேற்றப்பட்ட துணைச்சட்டம்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின்கீழ் சபரகமுவ மாகாண மாகாண சபையில் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்ட 2011.01.28 ஆந் திகதி 1691 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரத்தில் IV (ஆ) பகுதியில் வெளியிடப்பட்ட, சபரகமுவ மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்டதாக 2012.03.30 ஆந் திகதிய 1752 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (ஆ) பகுதியில் வெளியிடப்பட்டதுமான சபரகமுவ மாகாணத்தின் பிரதேச சபை அதிகார எல்லைகளில் நுளம்புகள் மற்றும் நோய் தொற்றக்கூடிய கிருமிகளை அழித்தல் சம்பந்தமான நகல் துணைச்சட்டத்தினை, இப்பிரேரணை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினம் முதல் நடைமுறைப்படுத்து வதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும் மேலே கூறப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் (நிறைவேற்றப்பட்ட துணைச்சட்டம்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் 01 ஆம் உப பிரிவின் கீழ் ருவன்வெல்ல பிரதேச சபை முன்மொழிகின்றது.",*

5-46

---

## இப்பாகமுவ பிரதேச சபை

### நிறைவேற்றப்பட்ட துணை நியதிச்சட்டத்தை ஏற்றுக்கொள்ளல்

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க (உள்ளூராட்சி நிறுவனங்களின் நிறைவேற்றப்பட்ட துணை நியதிச்சட்ட) சட்டத்தின் 2 ஆம் சரத்தின் கீழ் வட மேல் மாகாண சபை உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 1988 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி இடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் 1988 ஆம் ஆண்டின் ஓகத்து மாதம் 17 ஆந் திகதி உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரினால் வெளியிடப்பட்ட 01 ஆம் பக்கம் முதல் 42 ஆம் பக்கம் வரையிலான (உள்ளூராட்சி நிறுவனங்களின் நிறைவேற்றப்பட்ட துணை நியதிச்சட்ட) இப்பாகமுவ பிரதேச சபையினால் 2012.08.30 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுச் சபைக் கூட்டத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணையினை ஏற்றுக்கொண்டு அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

யூ. கே. சுமித் வீரசிங்ஹ,
தலைவர்,
இப்பாகமுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
இப்பாகமுவ,
2013, சனவரி 08.

5-47/1

---

## இப்பாகமுவ பிரதேச சபை

### நிறைவேற்றப்பட்ட துணை நியதிச்சட்டத்தை ஏற்றுக்கொள்ளல்

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க (உள்ளூராட்சி நிறுவனங்களின் துணை நியதிச்சட்ட) சட்டத்தின் 2 ஆம் சரத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபையின் (தொடர்ந்து வருகின்ற) சட்டத்தின் 2 (1) (அ) சரத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வட மேல் மாகாண சபை உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 2003.11.28 ஆந் திகதி உடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் 2003 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி வடமேல் மாகாண சபையினால் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ள வீடுகள் சொத்துக்கள் அபிவிருத்தி மற்றும் காணிகளை துண்டு போட்டு விற்பனை செய்வது சம்பந்தமாக (நிறைவேற்றப்பட்ட நியதிச்சட்ட) இப்பாகமுவ பிரதேச சபையினால் 2012.02.28 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுச் சபைக் கூட்டத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணையினை ஏற்றுக்கொண்டு அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

யூ. கே. சுமித் வீரசிங்ஹ,
தலைவர்,
இப்பாகமுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
இப்பாகமுவ,
2013, சனவரி 08.

5-47/2

## இப்பாகமுவ பிரதேச சபை

*நிறைவேற்றப்பட்ட துணை நியதிச்சட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கான பிரேரணை*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் (தொடர்ந்து வருகின்ற) சட்டத்தின் 2 ஆம் சரத்தின் (1) ஆம் உப சரத்தின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 261 ஆம் அதிகாரத்தின் 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் (நிறைவேற்றப்பட்ட துணை நியதிச்சட்ட) சட்டத்தின் 2 ஆம் சரத்தின் (1) ஆம் உப சரத்தின் கீழ் வட மேல் மாகாண சபை உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமேல் மாகாண சபை உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 2010.07.16 ஆந் திகதி 1663 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (அ) பிரிவில் வெளியிடப்பட்டுள்ள வடமேல் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 2011.04.28 ஆந் திகதி 1703/18 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் IV (அ) பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள பிரதேச சபைகளின் விரும்பத்தகாத அபாயகரமான மற்றும் விரும்பத்தகாத அபாயகரமான வர்த்தக நடவடிக்கை, நடமாடும் வர்த்தகம், பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்தி வைத்தல், பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நுளம்புகள் மற்றும் நோய்கள் பரப்பக்கூடிய கிருமிகளை அழித்தல் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் பாதைகள் தெருக்களை அலங்காரம் செய்தல் தங்குமிடங்கள் மற்றும் தங்குமிட வசதிகள் பற்றிய நிறைவேற்றப்பட்ட துணை நியதிச் சட்டங்கள் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்ட திகதியில் இருந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்வதற்காக மேலே குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவனம் (நிறைவேற்றப்பட்ட துணை நியதிச்சட்ட (2) ஆம் சரத்தின் (1) ஆம் உப சரத்தின் கீழ்) இப்பாகமுவ பிரதேச சபை பிரேரிக்கின்றது.*

*யூ. கே. சுமித் வீரசிங்ஹ,*
*தலைவர்,*
*இப்பாகமுவ பிரதேச சபை.*

*இப்பாகமுவ பிரதேச சபை அலுவலகம்,*
*இப்பாகமுவ,*
*2013, சனவரி 03.*

*5-47/3*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2013**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 03.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.04.2013 |
| | | வெள்ளி | 10.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.04.2013 |
| | | வெள்ளி | 17.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.05.2013 |
| | | வியாழன் | 23.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.05.2013 |
| | | வெள்ளி | 31.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.05.2013 |
| **யூன்** | .. | வெள்ளி | 07.06.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 23.05.2013 |
| | | வெள்ளி | 14.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.05.2013 |
| | | வெள்ளி | 21.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.06.2013 |
| | | வெள்ளி | 28.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.06.2013 |
| **யூலை** | .. | வெள்ளி | 05.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.06.2013 |
| | | வெள்ளி | 12.07.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 28.06.2013 |
| | | வெள்ளி | 19.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.07.2013 |
| | | வெள்ளி | 26.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.07.2013 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*